ஓம் ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம

**6. அறக்கட்டளையில் திரு. செந்தில்குமார், திரு. மாதவன் இவர்களுக்கு துணையாக ஒரு நிர்வாக வழிகாட்டி குழுவை அமைத்து செயல்பட ஆசியும் அறிவுரையும் வேண்டுகிறோம்.**

**ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகர் அருட்சுவடி**

23.05.2024

1. தண்டாயுதன் பேரற்புத வடிவாக
தவசி யான் இந்த கலியுகத்தில்
அவதாரம் உண்டாகி ஓங்காரக்குடில் படைத்து
உலக சேமத்திற்கே ஜீவதயவை கொள்கையாக்கி

2. ஆக்கியே உலகோர் நலம் பெற
ஆற்றல்பட இயக்கி வந்த பிரணவக்குடிலில்
குடிலில் ஆற்றல்பட இன்னும்
சேவைகள் குறைவின்றி குரு அரங்கன்

3. யானே முன்னின்று வழிநடத்த
இன்பமுற யான் நியமித்த
இணையிலா அறக்கட்டளை
மாந்தன் செந்தில் குமாரோடு

4. மாதவன் அடியவனும் இன்பமுற இணைந்து
இந்த அறக்கட்டளை சேவை
ஏற்றமோடு இனிதே எந்தவித
சலனமும் இன்றி நடந்தேற

5. நிர்வாகம் சிறக்க பரிபூரண ஆசியுண்டு
ஆசி தந்தேன் இதனோடு
அரங்கன் என் உண்மை விசுவாசிகள்
ஆற்றலாக ஓங்காரக்குடிலிலே வந்து

6. உயர்வாக சரணாகதி கொண்டிருக்க
அந்த அன்பர்களும் இவர்களோடு இசைந்து
ஒரு தனிக்குழுவாக அமைத்து
இன்பமுற தசமாந்தர்க்கும் மேலாகவும் கூட

7. அன்பர்களை கூட்டி இணைத்து
அவர்களையும் ஆற்றலாக சேர்த்து

அன்பொழுக அரங்கன் யான்
விரும்புகின்ற ஜீவதயவோடு இன்பமுற இவர்கள்

8. இந்த நிர்வாகத்தை சிறப்புற நடத்திட
இனிதே குழு அமைத்து
தர்மப்படி இந்த நோக்கம்
வெற்றிக் கொள்ள செயல்படவும்

9. அதற்கு உகந்த பாதுகாப்பும்
அனுமதியும் ஆசியும் அரங்கன் யான்
இன்று அன்பர்கட்கு அருளாசி வழி தந்தேன்
ஆக இந்த குழு மூலம் இன்னும்பல

10. உப குழுக்கள் பல்வேறு
சேவைகளுக்காக பிரிவாக உருவாக்கி
அவர்களெல்லாம் நிர்வாகியின் கீழும்
நிர்வாகத்தின் கட்டளையின்

11. அறக்கட்டளையின் நிர்வாகத்தின் கீழும்
ஆற்றல்பட இயங்க அரங்கன் என்
அனுமதியும் உத்தரவும் ஆசியும் ஆகும் இது
அச்சமற அன்பர்கள் பின்பற்றி வர

12. அனைத்தும் வெற்றியாகி அரங்கமகான்
என் அவதார நோக்கம்
உலகில் பூர்த்திபடும்
ஆசி அறிவுரை விளக்கம் முற்றே.

—சுபம்—